# தொழில் முனைவும் சிறு வியாபார முகாமைத்துவம்

VIPS

Vetrisun Institute of Professional Studies

# தொழில்முனைவின் தன்மையும் அபிவிருத்தியும்
(Nature and Development of Entrepreneurships)

## 01. தொழில்முனைவோர்/தொழில்முயற்சியாளர்

தொழில்முனைவோர்/தொழில்முயற்சியாளர் என்பவர் ஒரு வணிகத்தினை தொடங்கி அதில் காணப்படும் சவால்களினை எதிர்கொண்டு அதிக பலன்களை அனுபவிப்பவர்.

தொழில்முனைவோர்/தொழில்முயற்சியாளர் என்பது பிரேஞ்சு மொழிச்சொல்லின் Entrepreneur என்பதில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டது. பிரேஞ்சு மொழியியல் அறிஞரான Cantllon என்பவர் முயற்சியாளர் என்ற எண்ணைக்கருவினை அறிமுகப்படுத்தும் போது “புதிது புனைபவர் (Innovator), முதல் வழங்குநர் (Capital provider) தூண்டுபவர் (Promotor) இடர் தாங்குபவர் (Risk bearer) உடமையாளர் (Owner) என விளக்குகின்றார்.

An individual who creates a new business, bearing most of the risks and enjoying most of the rewards.

# தொழில்முனைவின் தன்மையும் அபிவிருத்தியும்

(Nature and Development of Entrepreneurship)

## 02. முயற்சியாளரின் பண்புகள்

1. கடின உழைப்பாளி
2. குறிக்கோளை அடைவதற்கான ஆர்வம் கொண்டவர்
3. குறிக்கோளைப்பற்றி நல்ல எண்ணம் கொண்டவர்
4. துணிவுடன் செயலாற்றுபவர்
5. தனது அனுபவங்களில் இருந்து கற்பவர்
6. பிறரது உதவியை பெறுபவர்
7. சுதந்திரமானவர்
8. புதிய கருத்துக்களை ஏற்பவர்
9. ஆபத்தினை ஏற்பவர்
10. நன்னடத்தை கொண்டவர்

VIPS Vetrisun Institute of Professional Studies

# தொழில்முனைவின் தன்மையும் அபிவிருத்தியும்

(Nature and Development of Entrepreneurship)

## 03. வெற்றிகரமான முயற்சியாளர் ஒருவருக்கு இருக்கவேண்டிய தகைமைகள்

(Essential Qualities to be a Successful Entrepreneur)

ஒரு வியாபாரம் வெற்றியடைய வேண்டுமெனில் ஒரு முயற்சியாளர் பின்வரும் தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.

1. **சரியான தன்மை** (Correctness) - சரியான செயற்பாடுகள் எப்பொழுதும் சரியான சிந்தனைகளில் இருந்தே எழுகின்றது. எனவே முயற்சியாளன் தனது வியாபாரத்தினை பற்றி சரியான சிந்தனை உடையவனாக இருக்க வேண்டும்.
2. **நேர உணர்வு** (Time Sense) - ஒரு முயற்சியாளர் எப்பொழுதும் நேரத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும். வாடிக்கையாளர்களது விருப்பங்கள் மிக விரைவாக மாறுவதால். இதனை முயற்சியாளன் கவனத்தில் கொண்டு எதிர்கால செயற்பாடுகளை திறனாக கையாள தனது சொத்துக்களை உடமைகளை எப்பொழுதும் சரியான இடத்தில் சரியான நேரத்தில் பேணவேண்டும்.

# தொழில்முனைவின் தன்மையும் அபிவிருத்தியும்

(Nature and Development of Entrepreneurship)

## வெற்றிகரமான முயற்சியாளர் ஒருவருக்கு இருக்கவேண்டிய தகைமைகள்

3. **வியாபார நேர்மை** - நேர்மை என்பது திறமையான கொள்கை மட்டுமல்லாது வியாபாரத்தில் மிகச் சிறந்த பயிற்சியாகவும் அமையும் என்பதனால் முயற்சியாளன் தனது வியாபாரத்திற்கும் தனக்கும் நன்மதிப்பை ஏற்படுத்த விரும்பின் அவர் நேர்மையை பின்பற்றல் வேண்டும்.

4. **கூட்டுத்திறன்** - முயற்சியாளன் எப்போதும் ஏனையவர்களுடன் ஒத்துப்போகக்கூடியதாக நிலைமைகளை சமாளிக்கக்கூடியதாக இருத்தல் அவசியம்.

5. **தீர்மானத்தை எடுக்கும் நிலை** - வியாபாரத்தில் வெற்றிகரமான பிரதான அம்சமாக தீர்மானமெடுத்தல் அமைவதால் விரைவானதும் சரியானதுமான தீர்மானம் எடுக்கும் திறன் முயற்சியாளனுக்கு அவசியம். தவறான தீர்மானத்தின் விளைவு வாய்ப்புக்களை தவறவிட வழிவகுக்கும்.

VIPS
Vetrisun Institute of Professional Studies

# தொழில்முனைவின் தன்மையும் அபிவிருத்தியும்

(Nature and Development of Entrepreneurship)

## வெற்றிகரமான முயற்சியாளர் ஒருவருக்கு இருக்கவேண்டிய தகைமைகள்

6. **சக்தி** - முயற்சியாளன் தன்முயற்சியில் வெற்றிபெற பௌதீக ரீதியாக சிறந்த உடல் உளசக்தி உடையவனாக இருத்தல் தேவையான தகுதியாக கருதப்படுகின்றது.

7. **ஆளுடைமை** - ஒரு முயற்சியாளனுக்கு மிகச் சிறந்த அறிவு, மனிதத்தன்மை தொடர்பான அறிவு, மன்னிக்கும் மனப்பாங்கு போன்ற ஆற்றல்களும் அவசியமாகும்.

VIPS
Vetrisun Institute of Professional Studies

# தொழில்முனைவின் தன்மையும் அபிவிருத்தியும்

(Nature and Development of Entrepreneurship)

## 04. தொழில்முனைவு /முயற்சியாண்மை (ENTERPRENERSHIP)

வியாபாரமொன்றின் சந்தர்ப்ப சூழ்நிலைகளை இனங்கண்டு நிச்சயமற்ற தன்மையினை எதிர் நோக்கி நிறுவனத்தின் இலக்கை அடைந்து கொள்வதற்காக கிடைக்கக் கூடியதான வளங்களை சிறப்பான முறையில் கைமாறுதல் முயற்சியாண்மை எனப்படும். எதிர்காலம் தொடர்பாக நிச்சயமற்ற தன்மையினை எதிர்கொள்ளுதல் முயற்சியான்மையாகும். மேலும் பொருளாதார முறையொன்றின் நடைமுறைச் சந்தர்ப்பங்களை புரிந்து கொள்ள கருமமாற்றுதல் முயற்சியாண்மையாகும். புதிய முயற்சியை ஆரம்பித்து வெற்றிகரமாக செயற்படுவதற்கு உரிய ஆற்றல் முயற்சியாண்மையாகும்.

VIPS
Vetrisun Institute of Professional Studies

# தொழில்முனைவின் தன்மையும் அபிவிருத்தியும்

(Nature and Development of Entrepreneurship)

## 05. தொழில்முனைவொன்று கொண்டிருக்க வேண்டிய பண்புகள்
(Characteristics of Entrepreneurship)

**1. எதிர்கால நிச்சயமற்ற தன்மையை எதிர்நோக்கக் கூடியதாக இருத்தல்**

அதாவது எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நட்டப் பொறுப்புக்களை எண்ணி தளர்வடையாது குறிப்பிட்ட வியாபார செயற்பாட்டில் மூலதனம், காலம் என்பவற்றினை ஈடுபடுத்தலும் ஆபத்தினை தாங்கிகொள்ளலும்.

**2. நல்லெண்ணத்துடன் கருமமாற்றும் திறன்**

தோல்வி நிச்சயமற்ற தன்மை, தடைகள் வீழ்ச்சி என்பவற்றின் மத்தியிலும் தளர்ச்சியடையாமல் நிறுவனத்தின் வெற்றி நோக்கி செயற்படல்.

**3. தலைமைத்துவ திறன் அல்லது ஆற்றல்**

தனது பணிகளையும் கட்டளைகளையும் ஏனையோர் ஏற்றுக்கொள்வதன் மூலம் முன்னேற்றகரமாக கருமமாற்றக்கூடிய திறன்.

# தொழில்முனைவின் தன்மையும் அபிவிருத்தியும்
(Nature and Development of Entrepreneurship)

## தொழில்முனைவொன்று கொண்டிருக்க வேண்டிய பண்புகள்
(Characteristics of Entrepreneurship)

**4. சரியான தீர்மானம் எடுக்கும் திறன்**

நிறுவன தொழிற்பாட்டின் போது ஏற்படக்கூடிய பிரச்சினைக்கான தீர்வுகளுள் மிகப் பொருத்தமான தீர்வினை விரைவாகவும் எளிதாகவும் தெரிவுசெய்யக்கூடிய ஆற்றல்.

**5. எதிர்வு கூறும் திறன்**

கடந்தகால நிகழ்கால தரவுகளைக் கொண்டு எதிர்கால நிலைமைகளை எதிர்வு கூறக்கூடிய திறன்

**6. வினைத்திறனுடன் செயலாற்றும் திறன்**

மிகக்குறைந்த செலவுகளுடன் குறைந்த காலத்திற்குள் நிறுவன தொழிற்பாடுகளை சீராகவும் வினைத்திறனுடனும் செயற்படுத்தி நிறுவன இலக்கினை அடையும் திறன்.

VIPS
Vetrisun Institute of Professional Studies

# தொழில்முனைவின் தன்மையும் அபிவிருத்தியும்

(Nature and Development of Entrepreneurship)

## தொழில்முனைவொன்று கொண்டிருக்க வேண்டிய பண்புகள்
(Characteristics of Entrepreneurship)

**7. பொறுப்பு**

நிறுவன தொழிற்பாடுகள் தொடர்பாக மிகப் பொருத்தமான முடிவை எடுப்பதற்கு பொருத்தமான சூழ்நிலைகள் வரும் வரை பொறுமையுடன் இருத்தல்.

**8. ஒத்துழைப்பும் பங்களிப்பும்**

நிறுவன தொழிற்பாடுகளில் ஏனையோரின் ஒத்துழைப்புடன் செயலாற்றல்

VIPS
Vetrisun Institute of Professional Studies

# தொழில்முனைவின் தன்மையும் அபிவிருத்தியும்

(Nature and Development of Entrepreneurship)

## 06. பொருளாதாரம் ஒன்றில் தொழில்முயற்சிகளின் தேவையும் முக்கியத்துவமும்

முயற்சியாண்மையானது கீழ்வரும் வழிகளில் ஒரு நாட்டின் பொருளாதாரமொன்றில் முக்கியத்துவம் பெறுவதாக அமைகின்றது.

1. நாட்டில் பயன்டுத்தப்படாமல் காணப்படும் வளங்களை உற்பத்தித் துறையில் உட்புகுத்தி வினைத்திறனாக செயற்படுத்துவதன் மூலம் பொருளாதார வளர்ச்சியினை மேம்படுத்தல்.
2. முதலாளித்துவ பொருளாதாரமொன்றில் தனியுரிமையின் செல்வாக்கினை தடுத்து போட்டி நிலைமைகளை உருவாக்கி அதன் மூலம் பொருளாதாரத்தினை மேம்படச் செய்தல்.
3. ஊழியச் செறிவுடைய உற்பத்தியினை அதிகரிக்கச் செய்வதன் மூலம் அதிகளவான வேலைவாய்ப்பு வசதிகளை வழங்கல்
4. நாட்டில் பல்வேறு பிரதேசங்களுக்கிடையில் சிறிய அளவில் காணப்படும் வளங்களை உற்பத்தித் துறையில் ஈடுபடுத்தல்.
5. வரையறுக்கப்பட்ட சந்தையையுடைய வியாபார செயற்பாடுகளில் நிறுவன கருமங்களை செயற்படுத்தல்.

# தொழில்முனைவின் தன்மையும் அபிவிருத்தியும்

(Nature and Development of Entrepreneurship)

## பொருளாதாரம் ஒன்றில் தொழில்முயற்சிகளின் தேவையும் முக்கியத்துவமும்

6. அரசாங்கத்தின் மாற்றமடையும் பொருளாதார கொள்கைக்கு ஏற்ப சிறியளவான நிறுவனங்களின் செயற்பாடுகளை உறுதிப்படுத்தல்.
7. பாரம்பரிய உற்பத்தி முறைகளைப் பாதுகாத்தல். அந்நியச் செலாவனியை குறைந்தளவு பயன்படுத்தும் நிறுவன கருமங்களை விருத்தியடையச் செய்தல்.
8. குறைந்தளவு மூலதனத்துடன் வியாபார முயற்சிகளை உருவாக்கல்.
9. சிறிய நடுத்தர நிறுவனங்களின் செயற்பாட்டிற்கு அரசினால் வழங்கப்படும் உதவிகளையும் ஊக்குவிப்புக்களையும் சிறந்த முறையில் பயன்படுத்தல்.
10. உள்நாட்டு தொழில் நுட்பங்களை பயன்படுத்தி உற்பத்தியை மேற்கொள்ளும் துறைகளை விருத்தியடையச் செய்தல்.
11. பேரளவு உற்பத்தி நிலையங்களை நிறுவுதலுக்கு அடிப்படையை வழங்கல்.

VIPS
Vetrisun Institute of Professional Studies

# தொழில்முனைவின் தன்மையும் அபிவிருத்தியும்
(Nature and Development of Entrepreneurship)

## 07. தொழில்முயற்சிகள் எதிர்நோக்கும் சவால்கள்

1. மூலதனப்பற்றாக்குறை
2. தொழில்நுட்ப பற்றாக்குறை
3. சந்தை சம்பந்தமான சாத்திய எண்ணக்கரு இன்மை
4. சந்தை பற்றிய அனுபவக்குறைவு
5. வியாபாரம் பற்றிய அறிவின்மை
6. ஊக்கப்படுத்தல் இன்மை
7. நேர அழுத்தம் அல்லது குழப்பமான நிலை
8. சட்டஒழுங்கு விதிகளின் இறுக்கமின்மை
9. தனியுரிமை பாதுகாப்பு
10. சட்டத்தின் இறுக்கமான தன்மை

VIPS
Vetrisun Institute of Professional Studies

# தொழில்முனைவின் தன்மையும் அபிவிருத்தியும்

(Nature and Development of Entrepreneurship)

## 08. மேலும் பல தொழில்முயற்சிகள் எதிர்நோக்கும் சவால்கள்

மேற்கூறப்பட்ட விடயங்கள் ஒரு முயற்சியாண்மைக்கு தடையாக அமைந்திடினும் மேலும் சில பிரச்சினைகளும் காணப்படுவதனை நோக்கலாம். அவையாவன.

### 1. முகாமைத்துவ பிரச்சினை அல்லது குறைபாடு

முயற்சியாளனுடன் நேரடியாகத் தொடர்புபட்ட பிரச்சினையே முகாமைத்துவ பிரச்சினையாகும். அதாவது முயற்சியாளன் குறித்த சந்தை வாடிக்கையாளரை அடையாளம் காணமுடியாமை. விலையிடல் உபாயங்களை தேர்ந்தெடுப்பதில் போதிய அறிவின்மை. வியாபார அதிகாரங்களையும் செயற்பாடுகளையும் பகிர்ந்தளிக்க முடியாததுடன் எதிர்காலம் தொடர்பான போதிய திட்டமிடல்களை செயற்படுத்தாமை என்பன முகாமைத்துவ குறைபாடுகளுக்கு இட்டுச் செல்பனவாக அமைகின்றன.

### 2. போதிய நிதி வசதியின்மை

நிதி நிறுவனங்களால் தொழில் முயற்சிகளுக்கு வழங்கப்படும் நிதியானது எல்லா முயற்சியாளர்களையும் சென்றடையாமை. இதனால் நிறுவனங்கள் நிதிப்பிரச்சினையை எதிர்கொள்கின்றன.

# தொழில்முனைவின் தன்மையும் அபிவிருத்தியும்
(Nature and Development of Entrepreneurship)

## 08. தொழில்முயற்சிகள் எதிர்நோக்கும் சவால்கள்

### 3. சந்தைப்படுத்தல் பிரச்சினை

சிறிய உற்பத்தியாளர்களின் உற்பத்திப் பொருளுக்கான விலை தளம்பல் அடைவதனாலும் அவற்றிற்க்கான போட்டிப் பொருட்கள் அதிகளவில் காணப்படுவதனாலும் இம்முயற்சியாளர்களின் உற்பத்தி முயற்சிகள் பாதிப்படைகின்றன.

### 4. சரியான பதிவுகள் இன்மை

சில நிறுவனங்கள் தங்களது நிறுவன செயற்பாடுகள் நிதி நிலைமைகள் போன்றவற்றுக்கான கணக்கேடுகளை தயாரிப்பதற்கான பயிற்சியின்மையின் காரணமாக வங்கி போன்ற நிதி நிறுவனங்களில் பல்வேறு பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றன.

### 5. சமூக வரையறைகள்

திறந்த பொருளாதார கொள்கையின் கீழ் பல தொழில் வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளமையால் பாரம்பரிய தொழில் முயற்சிகள் கைவிடப்பட்டு அரசு வேலையினை பெரிதும் விரும்புதல்.

# தொழில்முனைவின் தன்மையும் அபிவிருத்தியும்

(Nature and Development of Entrepreneurship)

## 08. தொழில்முயற்சிகள் எதிர்நோக்கும் சவால்கள்

**6. நிர்வாக பிரச்சினை**

நிறுனத்தின் ஆளணியினரையும் வளங்களையும் திறமையாக நிர்வகிப்பதில் நிறுவனங்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் நிறுவன முகாமைச் செயற்பாட்டின் குறைபாட்டுக்கு வழிவகுக்கின்றன.

7. தகவல்களைப் பெறுவதில் உள்ள பிரச்சினை

# தொழில்முனைவின் தன்மையும் அபிவிருத்தியும்

(Nature and Development of Entrepreneurship)

## 09. தொழில்முயற்சிகளின் அனுகூலம்

பொருளாதாரமொன்றில் தொழில்முயற்சிகளின் மூலம் பல அனுகூலங்கள் காணப்பட்ட போதிலும் பின்வருவன முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

1. **பொருளாதார வளர்ச்சி**
   பொருளாதாரத்தில் புதிய முயற்சிகள் தோற்றுவிக்கப்படுவதன் மூலம் பொருளாதார உற்பத்தி அதிகரித்து பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கின்றது.
2. **உற்பத்தித் திறன் அதிகரித்தல்**
   குறைந்தளவு பௌதீக மனித வளங்களைக் கொண்டு குறைந்த செலவில் அதிகளவான பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்யக்கூடிய ஆற்றலை குறிக்கின்றது.
3. **சந்தை இடமாற்றம் ஏற்படல்**
   முயற்சியாண்மையின் மூலம் சந்தையானது விஸ்தரிக்கப்படுவதனால் இந்நிலை ஏற்படுகின்றது.
4. **வேலைவாய்ப்பு உருவாக்கப்படல்**
   தொழில்முயற்சிகளின் மூலம் புதிய உற்பத்தி செயற்பாடுகள் அதிகரித்து தொழில் வாய்ப்புகள் உருவாக்கப்படுவதனால் வேலையின்மை குறைவடைகின்றது.

VIPS
Vetrisun Institute of Professional Studies

# தொழில்முனைவின் தன்மையும் அபிவிருத்தியும்
(Nature and Development of Entrepreneurship)

## 09. தொழில்முயற்சிகளின் அனுகூலம்

**5. வேலையில் புதிய தொழில்நுட்பம் உருவாக்கப்படல்**

புதிய தொழில்நுட்பங்கள் பயன்படுத்துவதற்கு தொழில்முயற்சிகள் வழிவகுக்கின்றன.

**6. பயன்படுத்தப்படாத வளங்கள் பயன்படுத்தப்படல்**

தொழில்முயற்சிகளினால் புதிய பல தொழில்கள் உருவாக்கப்படுவதனால் பல்வேறுபட்ட பயன்படுத்தப்படாத வளங்களும் பயன்படுத்தக் கூடியதாக இருப்பதுடன் வினைத்திறனுடன் கையாளப்பட வழிவகுக்கின்றது.

VIPS
Vetrisun Institute of Professional Studies

# தொழில்முனைவின் தன்மையும் அபிவிருத்தியும்

(Nature and Development of Entrepreneurship)

## 10. முயற்சியாளர்களின் சமூகப் பொறுப்புக்கள்

1. சூழலைப் பாதுகாத்தல்
2. சமூக ஒழுக்க நெறியைப் பேணல்
3. சிறந்த தரம் வாய்ந்த பொருட்களை உற்பத்தி செய்தல்
4. வாடிக்கையாளருடன் நேர்மையாக நடந்து கொள்ளல்
5. நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்தல்
6. வளங்களை சரியான முறையில் திட்டமிட்டு விரயம் ஏற்படுவதைத் தடுத்தல்
7. பிரதேச ரீதியான அபிவிருத்திக்கு உதவுதல்
8. நாட்டின் வேலைவாய்ப்பிற்கு பங்களிப்புச் செய்தல்
9. ஊழியரை மதித்து நடத்தல்
10. ஊழல்களில் ஈடுபடாமல் நேர்மையாக நடத்தல்

VIPS
Vetrisun Institute of Professional Studies

# தொழில்முனைவின் தன்மையும் அபிவிருத்தியும்

(Nature and Development of Entrepreneurship)

## 11. தொழில்முயற்சி ஒன்றை உருவாக்கல் தொடர்பாக கவனத்தில் கொள்ளவேண்டிய முக்கிய விடயங்கள்.

1. சந்தைப்படுத்தல் - உருவாக்கப்படும் தொழில்முயற்சிக்கு சாதகமான சந்தையினை கருத்தில் கொள்ளல்.
2. தொழில்நுட்பத்தினை தெரிவு செய்தல் அல்லது பெறுதல்.
3. பொருத்தமான இடத்தினை கண்டுபிடித்தல்.
4. தேவையான இயந்திர உபகரணங்களைப் பெறல்
5. தேவையான மூலப்பொருட்கள் & தொழிலாளர்களைப் பெறல்.
6. தேவையான மூலதனத்தின் அளவினைத் தீர்மானித்தல்.

VIPS
Vetrisun Institute of Professional Studies

# தொழில்முனைவின் தன்மையும் அபிவிருத்தியும்

(Nature and Development of Entrepreneurship)

நீங்கள் ஒரு தொழில் முனைவோரா?

ஆர்வமுள்ள தொழில் முனைவோர் முதலில் தங்களிடமுள்ள சிறப்பான குணங்களை கண்டறிய வேண்டும். இந்த சுய ஆர்வம் மற்றும் பகுப்பாய்வு அவர்களது பலவீனத்தை தவிர்த்து வலிமைப்படுத்த உதவும். தொழில் முனைவோர்கள் கீழ்காணும் குணாம்சங்களை கொண்டிருத்தல் வேண்டும்.

1. வெற்றியடைய வேண்டும் என்ற ஆர்வமுடையவரா?
2. சவால்களை எதிர்கொள்ளும் திறன் கொண்டவரா?
3. புதிய வாய்ப்புக்களில் கவனமுடையவரா?
4. குறிக்கோளை அடையும் வரை தொடர்ந்து செயலாற்றும் எண்ணம் உடையவரா?
5. சூழ்நிலைகள் எவ்வாறாயினும் எதிர்கொள்ள தயாரானவரா?
6. தனித்து சுயமாக செயலாற்றுபவரா?
7. உங்களுடைய முடிவுகளில் நெகிழ்வுத்தன்மையானவரா?
8. எதிர்கால செயற்பாடுகள் தொடர்பாக எதிர்வு கூறும் ஆற்றல் உள்ளவரா?
9. மற்றவர்களுடன் சேர்ந்து பணியாற்ற விருப்பம் கொண்டவரா?
10. புதியவற்றை கற்றுக்கொள்ளும் ஆர்வம் உடையவரா?

அனைத்து திறன்களையும் ஒருவர் பெற்றிருக்க முடியாது. பெரும்பாலானோர் அநேக திறன்களைப் பெற்றுள்ளனர்.